BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

பெண்ணுடல் அரசியலும் பாலியல் வெளிப்பாடும்

(கவிஞர் சசிகலா பாபு-வின் கவிதைகளை முன்வைத்து)

முனைவர் பால்சிங். ரா
தமிழ்த்துறைத் தலைவர்
பெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வள்ளியூர்
கைப்பேசி : 9442008694
மின்னஞ்சல்: hebsipaul@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பெண்களின் மன இயல்புகள், உணர்வுகள், உடல் அரசியல் போன்றவை தீர்க்கமாக திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டவையாக உள்ளன. ஆணை முதன்மையாகக் கொண்ட சமூகத்திற்கு ஏற்றவாறு பெண்ணுடல் அரசியலையும் பாலியல் வெளிப்பாடுகளையும் இதுகாறும் வரையிலான பேரிலக்கியங்களும், கவிதைகளும் பேசி வந்துள்ளன. இவற்றிலிருந்து மாறுபட்ட கவிதைக் குரல் சமகாலத்தில் வெளிவரத் துவங்கியுள்ளன. இதன் தீவிரக் குரலாகக் வெளிப்படுபவர் சசிகலா பாபு. இவரின் கவிதைகள் பெண்ணுடல் அரசியலையும் பாலியல் வெளிப்பாடு களையும் நேரெதிர் நிலையிலிருந்து அலசுகின்றன. பெண்களின் மன உணர்வுகளையு உடல் ரீதியான உணர்வுகளையும் மிக அணுக்கமாக இவர் கவிதைகள் வெளிப்படுத்துகிறன. பெண்ணுடல் சார்ந்த அனுபவங்களான பாலூட்டல், பிரசவம், மாதவிடாய், சுயஇன்பம், பாலுணர்வனுபவம், பாலியல் சுதந்திரம் உள்ளிட்ட உணர்வுகளை வேறுபட்ட பார்வையில் சசிகலா பாபுவின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. இதனை இக்கட்டுரையானது விரிவாக ஆராய்கிறது. பெண்ணுடல் அரசியல் மைய்யப்புள்ளியிலிருந்து இக்கட்டுரை துவக்கம் பெறுகிறது.

குறிச்சொற்கள்

பெண்ணுடல், பெண் மைய எடுத்துரைப்பு, பாலியல்பு, பாலியல் சமத்துவம், பாலுணர்வு, பெண்ணுடல் அரசியல்.

முன்னுரை

பெண்களின் இயல்பான வாழ்க்கை முறை, மன உணர்வுகள் போன்றவற்றை, ஆணை மையமிட்ட சமூகத்திற்கேற்றவாறு கட்டமைத்தும், அதனை நியாயப்படுத்தியும் சங்கப்பாடல்கள் பலவும் வெளிவந்திருக்கின்றன. பெண் என்பவள் ஆணை முன் வைத்த சமூகம், குடும்பம் என்ற அமைப்பிற்குள் தன்னைக் கரைத்துக் கொண்டு வாழ வேண்டுமென்ற நிர்பந்தத்தில் ஆணாதிக்க அரசியல் உள்ளது. களவு, கற்பு என்ற கருத்தாக்கங்களில் கற்பு, பெண்களை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் கட்டுப்படுத்துகிறது. அதுவே, கன்னி, மனைவி, பரத்தை, கைம்மை என்ற நான்கு நிலைகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுகிறது. ஆனால் இப்போக்கிற்கு எதிரான பெண் குரல்களும் சங்கப்பாடல்களில் ஒலிக்கின்றன. சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் தந்தை வழிச் சமூகப்போக்குகள் முதன்மை பெற்றிருந்தாலும் கூட தாய்வழிச் சமூகத்தின் எச்சங்கள் தென்படுகின்றன. இதனொரு பகுதியாக மரபிற்கு மாறாகக் காதல் உணர்வையும், உடல் வேட்கையையும் மனத்தடைகளற்று வெளிப்படையாகக் கவிதையில் யாத்திருப்பது இன்றைய பெண் கவிஞர்களுக்கு உந்துதல்களாக உள்ளது. அவ்வகையில் பெண்ணுடல் அடையாளங்களையும் பாலுறவையும் மையமாகக் கொண்டு கவிதை பாடும் இன்றைய பெண்கவிஞர்களின் குரல்கள் ஆணாதிக்க அரசியலுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிரான கவிக்குரல்களாகப் பதிவாகியுள்ளன. இதில் சுகிர்தாராணி, சல்மா, மாலதி மைத்ரி, உமா மகேஸ்வரி, தமிழச்சி தங்கப் பாண்டியன், வெண்ணிலா, சசிகலா பாபு இவர்களின் கவிதைக் குரல்கள் குறிப்பிட்டுச்

சொல்லப்பட்ட வேண்டியவையாக உள்ளன. பெண் தனது உடலையும் மனத்தினையும் பெண் என்ற நிலையில் அவள் எதிர்கொண்ட அனுபவங்களையும் செறிவான மொழியில் கவிதையாக்கும் கவிஞர்களில் சசிகலா பாபு முக்கியமானவர். அவ்வகையில் இவரின் கவிதைகள் ஊடாக வெளிப்படும் பெண்ணுடல் அரசியலையும் கருத்தாங்களையும் இக்கட்டுரையின் வழியாக முன் வைக்கலாம்.

பெண்ணுடலை எழுதுதல்: [Ecriture Feminine]

பெண்களின் எழுத்துக்கள் என்பது பெண்ணுடலிலிருந்தும் அதன் தனித்துவமான உணர்வுகளிலிருந்தும் தோற்றம் பெறுகின்றன எனக் கொள்வதே பெண்ணுடலை எழுதுதல் என்ற கோட்பாடாகும். பெண்கள் தனித்துவமான உணர்வு, உளவியல், பாலியல்பு கொண்டவர்கள் எனவும் அதற்கு அவர்களது உடல் சார்ந்த வேறுபாடுகளே அடிப்படையாக அமைகின்றன என்று லூயிஸ் இரிகாரே என்ற பெண்ணியவாதி கூறுகிறார் (1985:67). பெண்ணுடலை எழுதுதல் என்ற கோட்பாட்டைக் கழிந்த நூற்றாண்டின் எழுபதுகளில், ஆன்னி லெக்லக் (Annie Leclerc), சேவியர் கௌத்திர் (Xavier Gauthier), மார்கிரெட் டுராஸ் (Marguerite Duras) ஆகிய பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் அறிமுகப்படுத்தினர். பின்னர் இரண்டாம் கட்டமாக ஹெலன் சிசு (Helen Schulz) லூஸ் இரிகாரே (Luce Irigarey) போன்றோர் முன்னெடுத்தனர். பெண்களின் எழுத்துகள் தொடர்பான இக்கோட்பாடு அவர்களின் தனித்துவங்களுக்கு மதிப்பளித்தல், உடலைக் கொண்டாடுதல் என்ற அடிப்படையில் அமைந்தது. பெண்களது தனித்துவமான உடல், உள, உணர்வு வேறுபாடுகளைப் போலவே அவர்களது எழுத்தும் தனித்துவமானது என்பது இவர்களது கருத்தாகும். பெண்களது உடல், பாலியல்பு போன்ற எழுத்தின் ஊற்றுவாயாக அமைவதால் அச்செயற்பாட்டைப் பெண்ணுடலை எழுதுதல் என்று குறிப்பிடுகின்றனர். தமிழில் இவ்வெழுத்துக்கள் சங்ககாலம் முதல் சமகாலம் வரை பெண் கவிஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் உடல் சார்ந்த அனுபவங்களினூடாக, உடல் சார்ந்த படிமங்களும் வெளிப்பட்டுக் கவிதையை அழகியல் உச்சமாக்குகின்றன. தற்காலப் பெண்ணியக் கவிஞர்களில் சுகிர்தாராணி, தமிழச்சி தங்கப்பாண்டியன் உள்ளிட்ட நவீன கவிஞர்கள் தங்கள் கவிதைகளில், பெண்களது பாலுணர்வு, காதலுணர்வு என்பவற்றைத் தனித்த மொழியில் பெண் உடல் சார்ந்த அனுபவங்கள் வழியாக முன்னிறுத்துகின்றனர். இதில் பெண்களுடைய உடல் சார்ந்த அனுபவங்களான பிரசவம், பாலூட்டல், மாதவிடாய், சுயஇன்பம், பாலுணர்வனுபவம், பாலியல் சுதந்திரம் மற்றும் உடல் சார்ந்த உபாதைகள் போன்றவற்றைக் கவிதையின் கருப்பொருளாகக் கட்டமைத்துப் பெண்ணுடல் அரசியலையும் பாலியல் வெளிப்பாட்டையும் பேசுபவர் கவிஞர் சசிகலா பாபு. அவரின் மறையத் தொடங்கும் உடல்கிண்ணம் கவிதைத் தொகுப்பின் வழியாக இதனைக் காணலாம்.

தாய்மையுணர்வை - அனுபவத்தைக் கவிதையாக்குதல்

பெண்களின் உடல், உளம் சார்ந்த உணர்வுகளில் தாய்மை என்பது மிக முக்கியமானது. காலந்தோறும் இவ்வுணர்வை ஒருவித புனிதமாகக் கருதி, அதனுள் பெண் அடையும், வலியை, வேதனையை மறைத்தே வந்திருக்கின்றனர். ஒரு பெண்ணிற்கு நிகழ்த்தப்படும் இத்திட்டமிட்ட வன்முறையைக் கேள்விக்குட்-படுத்துகிறார் சசிகலா பாபு.

"ஒவ்வொருமுறை ஊசி
இறங்கும் போதும்
சற்றுமுன்னர் பெற்ற
சிசுவை நினைத்துக் கொள்ளுங்கள்
இல்லையேல்
மரணிப்போமா என
நம்ப வேண்டியிருக்கும்
எல்லாம் ஆயிற்றா?
இப்போது
கழிவறை செல்லுங்கள்

வெளியேறும்
கொஞ்சும் சிறுநீருக்காய்
அரைமணி நேரம்
அங்கேயே கதறியழுங்கள்
ஆனால்
சத்தம் வெளியே கேட்காமல்" *(ம.தொ.உ.கி., ப.18)*

ஒரு பெண் கருத்தரித்தலிருந்து குழந்தை பெற்றெடுக்கும் வரை அடையும் உடல்சார் அனுபவங்கள், வலிகள், கொந்தளிப்புகள் எளிதில் கடந்து செல்லத்தக்க ஒன்றாக உள்ளன. இப்புறக்கணிப்பிற்குப் பின்னும் அரசியல் உள்ளது. அதுவே இவ்வுடல்சார் அனுபவத்தை வெளிக்காட்டாமல் பார்த்துக் கொள்கிறது. ஆனால் கவிஞர் சசிகலா பாபு அத்தடையைத் தாண்டுகிறார்.

"முன்னரே சொல்ல மறந்துவிட்டேன்
வலி தொடங்கும் முன்னரே
அந்த செவிலி
அந்தரங்க மயிர்களை
மழிக்கும் போது
கண்களை மூடிக்கொள்ளவும்
அவளது கத்தியின் வேகம்
உங்களை அச்சுறுத்தக்கூடும்" *(ம.தொ.உ.கி., ப.18)*

என்ற கவிதை வரிகள் அதிர்ச்சியூட்டுகிறது. பெண்ணின் பிரசவ அறைக்குள், நடக்கும் உடல்சார் நிகழ்வுகள் மிருகவதை போல் கவிஞரால் உணர வைக்கப்படுகிறது. அதுவே கவிதையை அர்த்தப்படுத்துகிறது. பெண்கள் தாய்மைப்பேற்றிற்குள் கொள்ளும் இவ்வுணர்வோட்டத்தோடு உடல், உள அனுபவங்கள் ஒத்திசைவாக்கம் பெற்று, சசிகலா பாபு கவிதையைப் புதுமையாக்கம் செய்கிறார்.

பாலியல்பு

பெண்ணுடல் என்பது ஆணின் உரிமைப்பொருளாக, போகப் பொருளாக இருந்து வரும் கருத்தாக்கங்களுக்கெதிரான கலகக்குரலாகப் பெண்களின் கவிதைகள் எழுந்து வருகின்றன. பெண்மை, பெண் பாலியல்பு, பாலுணர்வு, பெண்ணுடல் பற்றிய மரபு ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட மனித நடத்தை விதிகளையும் கருத்தியற் கூற்றுக்களையும் மறுதலிக்கும் பெண்ணியவாதிகளின் குரல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் துவக்கம் பெற்றன. 'பகுத்தறிவு அடிப்படையில் பார்க்கிற போது உடல் என்பது வெளித்தெரிகின்ற திடப்பொருளாகும். ஆனால் குறியீட்டு முறைமையினுள் வைத்துப் பார்க்கிறபோது உடல் என்பது ஒரு சமூகக்குறியீடாகும். பால் (Sex) உடற்கூறு சார்ந்த யதார்த்தம் என்றால் பாலியல் (Sexuality) என்பது பண்பாட்டடிப்படையில் கட்டப்பட்டதாகும். சமூகம் தனது பால்நிலை மாதிரிகளை (Gender Types) உருவாக்குகின்ற முறைமையாகப் பாலியல் (Sexuality) அமைகிறது. அதேபோல் சமூகத்திற்கும் பாலுக்கும் (Sex) இடையிலான உறவைப் புனைகிற முறைமையாகவும் பாலியல் அமைகின்றது' என்கிறார் நெல்லி @பர்மன் (Nelly Furman, 1985 :73).

பெண்ணின் பாலியல்பு (Sexuality) என்பது இயல்பானதாகவோ பெண்ணிலையின் நின்றோ அணுகப்படுவதில்லை. மாறாக ஆண்நிலையில் நின்றே கட்டமைக்கப்படுகின்றது. இதனால் உடன்படுதல் (Consent) என்பதை மையமாக வைத்தே பெண்ணின் பாலியல்பு கட்டமைக்கப்படுகின்றது என்கிறார் மிகச்சிறந்த பெண்ணியவாதியான சாராமில்ஸ் (2003:90). இவர்கள் குறிப்பிடுவது போன்று பெண்களின் பாலியல்பு மற்றும் அது சார்ந்த நடத்தைகளை ஆண்களே மொழி இலக்கியங்கள் வழியாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். (விதிவிலக்கு பெண்கள் பாடிய ஒரு சில சங்கப்பாடல்கள்) இலக்கியங்கள் வழி கட்டமைக்கப்பட்ட இத்தளைகளைப் புதுவரிசையில் சுழலும் நவீன தமிழ்க் கவிஞர்கள் தகர்க்கின்றனர். இதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர் சசிகலா பாபு. இதற்கு இவரது கவிதை வரிகளே சான்று கூறும்.

"ஆகப்பெரும் இன்பந்தரும்
உடலை
நாம் இத்தனை
விலக்க வேண்டாம்
உன் உச்சங்களில்
அரேபியத்தாரை புறாபோல்
நீயெழுப்பும் ஓசை
எத்தனை அழகானது தெரியுமா?" (ம.தொ.உ.கி., ப.20)
"ஒவ்வொரு உச்சத்தின் பின்னும்
முத்தங்கள் எதிர்பார்த்து
ஏமாறுபவள்களுக்காய்
முத்தச் சத்தத்துடன்
பெய்கிறது
இன்றைய மழை" (ம.தொ.உ.கி., ப.65)

தமது பாலியல்பு பற்றி வெளிக்காட்ட படிமங்களையும், குறியீடுகளையும் தேடி அலையாமல் நேரடியாக வெளிப்படுத்த அசாத்தியத் துணிச்சலும் புலமையும் வேண்டும் சசிகலா பாபு இதனை இயல்பாகப் பெற்றிருக்கிறார்.

தமது பாலுணர்வை அன்றாட மொழியிலும் இலக்கிய மொழியுலுமாக நேரடியாக வெளிக்காட்டப் பெண்களுக்கு இத்தனை நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. சசிகலா பாபு அதன் சமீபத்திய தூண்டுகோலாகிறார். பல சிறப்புகளையும், நுண்ணிய தன்மையினையும் உடைய பாலியல்பைப் பிறர் அறியாது மறைக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தன் கவிதைகளினூடாக உணர்த்துகிறார்.

"என தாரண்ய வாயில்
உடைத்துக் கொண்டு
அந்நியனாய் நுழையும் போது
வெடித்துச் சரிகின்றன
மகரந்தப் பூக்கள்" (ம.தொ.உ.கி., ப.37)

சமகாலக் கவிதைகளின் மேல் மரபுகளின் இறுக்கம் காரணமாகப் பெண் கவிகள் தமது பாலியல்பை வெளிப்படுத்த இயலாத நிலை சமீபகாலம் வரை இருந்தது. ஆனால் சசிகலா பாபு மிகச் சுலபமாக அதை மீறுகிறார் என்பதற்கு இவ்வரிகளே சாட்சி. பெண்ணின் பாலுணர்வை எல்லையற்றதாகவும் கட்டற்றதாகவும் விவரிக்கும் பல கவிதை வரிகள் சசிகலா பாபுவின் கவிதைத் தொகுப்பினுள் காணமுடிகிறது.

உடல் எனும் கவிதைப் பாடுபொருள்

இரண்டாயிரம் ஆண்டு கவிதைப் பாரம்பரியம் கொண்ட தமிழ்க் கவிதை மரபில் பெண் உடல் என்பது பல்வேறு காலக்கட்டங்களில் பாடுபொருளாக, பேசு பொருளாக இருந்து வந்திருக்கிறது ஆனால் அது ஆணின் பார்வையில் உருவகம் பெற்று மையப்படுத்தப்பட்டதாகவும், ஆன்மீகம் எனும் பொருண்மையில் அழுத்தம் பெற்றதாகவும் பெரும்பாலும் பாடப்பட்டிருக்கிறது. பெண்கள் தங்களின் உடலைத் தாங்களே புனைவுவெளியில் வைத்த போது மேற்கொண்ட மரபு தலைகீழாக மாறியது. இருப்பினும் ஒருகட்டத்தில் பெண்களின் கவிதை வெளி உடலை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டு, கவிதைக்கும் உணர்வுகளுக்குமான பெரும் இடைவெளியை உருவாக்கியது. இச்சூழலில் பெண் உடல் என்பது அவர்களுக்கே புதிராக, விவரிக்க முடியாத வலியாக, முரணாக மாறிவிட்ட நிலை புரிந்து கொள்ளத்தக்கது. இப்பின்னணியில் சசிகலா பாபு-வின் கவிதைகள் பெண்ணுடல் குறித்து முன்வைத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்கின்றன. பெண்ணுடல் என்பது உறுப்பாக, கருவியாக, மொழியாக ஒரு ஆண் காண்பதிலிருந்து முற்றிலும் மாற்றாக ஒரு பெண் காணும் நோக்கில் சசிகலா பாபுவின் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

"நீ உதாசீனம் செய்த
என் உடல் இப்போது
நொடிக்கு நொடி
உச்சத்தில் திளைக்கிறது
பாறை போல் இறுகி
உள்ளே அழுந்துகிறது
என் உறுதி" (ம.தொ.உ.கி., ப.73)

இக்கவிதைக் குரலின் உள்ளே பொதிந்துள்ள உறுதியை, வலியை ஒரு சராசரி வாசகனும் உணர்ந்து கொள்ள முடியும். பெண்ணுடல் புறக்கணிப்பின் எல்லைக்குச் சென்று விட்ட நிலையில் அதிலிருந்து மீளச் செய்யும் உறுதியான வரிகள் இவை. உடலை ஒரு கிண்ணமாகக் கருதுவது கிறிஸ்தவ, பாகனிய மரபுகளில் தொடர்ச்சியாகப் பயின்றுவரும் குறியீடு. தமிழ் மரபில் பெண்ணுடலை நிலமாகவும், ஆணை ஏராகவும் உருவகப்படுத்திப் பார்ப்பதைப் போன்றே, கிறிஸ்தவ மரபில் பெண் கிண்ணம். ஆண் வாள். கன்னிமேரியைப் பரிசுத்த ஆவி நிரப்பிய கிண்ணமாகக் குறிப்பிடுவதுண்டு. இத்தொன்மத்தை ஒத்த மனதுடன் ஏற்கிறார் கவி சசிகலாபாபு. பெண்ணுடல் திரும்பத் திரும்ப இவ்வுருவகத்தை அடியொற்றியதாகக் கவிதையில் காணக்கிடக்கின்றன.

"வாய்பிளந்த திமிங்கலம் போல்
வானோக்கி கிடந்தது
ஒற்றைப் பாறை" (ம.தொ.உ.கி., ப.36)
"தடாகம் கண்ட தாகப்பறவையென" (ம.தொ.உ.கி., ப.36)
ஒவ்வொரு
கிண்ணமாய்
கண்ணிலிருந்து மறை
காத்திருக்கும்
ஒரு உடல் கிண்ணம்" (ம.தொ.உ.கி., ப.63)

இக்கவிதை வரிகளில் பெண்ணுடலை நிலமாகவும், கிண்ணமாகவும், தடாகமாகவும் உருவகப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. ஒரு தேய்வழக்கான உருவகப்படுத்துதல் என்றாலும் கவிதையின் நுணுக்கம் அதில்தான் வெளிப்படுகிறது. புதிய புதியக் காட்சிப் படிமங்களாலும், பிடிபடாத உருவகங்களாலும் வாசகனைத் திணறடிக்காமல் எளிய உருவகங்கள் வழி சொல்ல வந்த, உணர்த்த வந்த விஷயத்தை எளிமையாக உணர்த்திவிடுவது சசிகலா பாபுவின் பலமாகும். அதை மிகச் சரியாக செய்கிறார். ஆணின் காமம் ஓரிடத்தில் மட்டும் குவிந்திருக்கும் நிலையில் பெண்ணின் உடல் கொள்ளும் காமம் முழுவதுமாகப் பரவிக்கிடப்பதை வெளிப்படுத்த அவருக்குத் தயக்கமிருக்கவில்லை. அதை உருவகப்படுத்தியிருப்பது ஆணாதிக்கச் சமூகத்திற்கு விடப்படும் சவாலாகவே கருதமுடிகிறது. மட்டுமின்றி, பெண்ணுடல் பற்றிய ஆண்மொழியைப் பகடியும் செய்கிறது.

வரையற்ற பாலுணர்வு

"தந்தை வழி அமைப்பைத் தகர்ப்பதற்காகப் பெண்கள் வரையற்ற பாலுறவு கொள்ளலாம் என்றும், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடலாம் என்றும், தீவிரப் பெண்ணியவாதிகள் (Radical Feminists) கருதுகின்றனர்" (இரா. பிரேமா 2001:56) சமூகம், அரசியல், கலாச்சாரம் உள்ளிட்ட அதிகார அமைப்புகள் முன்வைக்கும் அனைத்துவித அடக்குமுறைகளையும் தகர்த்தெறிய தீவிரப் பெண்ணியவாதிகள் துடிக்கின்றனர். இதனை ஆமோதிக்கும் நிலையிலேயே அவர்களின் கலை இலக்கியங்களும் ஆண் முதன்மையைத், தனிச் சொத்துரிமையைத், தந்தை வழிச் சமூக அமைப்பை எதிர்த்துக் குரல் எழுப்புகின்றன. இதனொரு பகுதியாக வரையற்ற பாலுணர்வு அல்லது ஒருபாலுறவு ஆகியவைகளை முன் வைக்கின்றனர். தமிழில் கவிஞர் சுகிர்தாராணியின் கவிதைகள் இத்தளத்தில் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. மறுப்பதற்கில்லை. அவரின் தொடர்ச்சியாகக் கவிஞர் சசிகலா பாபுவையும் கூறலாம்.

“உங்களைக்
கடப்பதுபோல்
அத்தனை எளிதாயில்லை
உங்கள் உடலைக் கடப்பது எனும்
பெண்களைக் கண்டு
அஞ்சாதீர்” (ம.தொ.உ.கி., ப.21)
“குகைக்குள்
நிமிரும்
உணர்ச்சிகள்
சித்திரங்களாய்
கற்பாறைகளில்
ஏறிப்
படுத்துக் கொள்ளும்” (ம.தொ.உ.கி., ப.67)

என்னும் கவிதை தீர்க்க முடியாத விரக தாபத்தைத் தீர்க்கும் வாயில்களைத் தேடும் பெண்ணின் குரலாக உள்ளது. இதற்கு வடிகாலாக, ஆண் ´ பெண் உறவாக முடிவு அமைய வேண்டும் என்பதல்ல. மாறாக மாற்றுவழிப் பால் உறவு முறை கோரும் குறியீடுகளாகச் சசிகலா பாபுவின் கவிதைகள் வினைபுரிகின்றன.

“நடந்துவந்த பாதையை
சுருட்டி
கக்கத்தில் இடுக்கி
நடக்கும்
துறவி” (ம.தொ.உ.கி., ப.64)

இக்கவிதையில் பாதையைச் சுருட்டி கக்கத்தில் இடுக்கி நடக்கும் துறவி பல பொருண்மைக்கான குறியீடு. ஆண்வழி வாரிசுரிமை முறையை உறுதி செய்கின்ற வகையில் பெண்ணுடல் கண்காணிக்கப்படவும் உரிமைப் பொருளாக்கப்படவும் தேவை ஏற்பட்டு, கற்பு என்பது புனிதமாக வழிவழியாக கற்பிதம் செய்யப்பட்டது. இதனை உடைத்தெழ நவீனப் பெண்ணியவாதிகள் பல தளங்களில் தயாராகினர். அதிலொன்றே வரையற்ற பாலுணர்வு. இதினை வலியுறுத்தும் முகமாகக் கற்பெனும் கட்டிலிருந்து வெளியேறக் கவிதை வழி முயற்சி, கவிஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. அதிலொரு கண்ணியாக சசிகலா பாபுவின் கவிதைகள் உள்ளன.

ஒரு காலக்கட்டம் வரையிலும் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட விதிகளும் புனிதமாக எண்ணி கடக்க முடியாமல் செய்துவிட்ட தடைகளும் சேர்ந்து பெண்களுக்கான பாலியல் சமத்துவத்தைச் சீர்கெடுத்துவிட்டன என்பதே பெண்ணியவாதிகளின் குற்றச்சாட்டாக உள்ளது. எனவே அதனைச் சீர் செய்வதற்கான தீர்வாக வரையற்ற பாலுறவை அவர்கள் முன் வைக்கின்றனர். சசிகலா பாபுவின் கவிதைகள் அதற்கான ஆதரவுக் குரலாக வெளிப்படுகின்றன.

பெண் மைய எடுத்துரைப்பு

பெண் கவிஞர்களுடைய தனித்தன்மை வாய்ந்த எடுத்துரைப்பு உத்திகளில் முதன்மையானது பெண்கள் தங்களுக்கிடையே உரையாடிக் கொள்வதாக அமையும் உரையாடல் உத்தியாகும். அடிப்படையில் இவ்வுத்தி உரையாடல் முன்வைப்புகளில், இருபாலினத்தாரை விளிக்காமல், விளிப்பவது இன்னொரு பெண்ணை அல்லது பெண்கள் கூட்டத்தை நோக்கி விளிப்பதாகக் கவிதைகள் புனைவதாகும். இதில் உரைப்பவரும் கேட்பவரும் பெண்களாகவே அமைந்து விடுவதால் சமூக கட்டுக்களுக்கெதிரான வலுவான குரலாக வெளிப்படும். அதுவே புறச்சூழலில் பெண்களுக்கிடையிலான உணர்வு மற்றும் உளநிலை சார்ந்த ஒருமுகத்தன்மையை வளர்த்தெடுக்கும் நவீன பெண் கவிஞர்களின் கவிதைகளில் இவ்வெடுத்துரைப்பு உத்தி புதிய கருத்தியல் தளங்களில் பெண்களின் குரலை அர்த்தப்படுத்திவிடுகின்றன. கவிஞர் சசிகலா பாபுவின் கவிதைகளும் இவ்வுத்தியிலேயே பெண்ணுடல் அரசியலைப் பேசுகின்றன.

"ஆகப்பெரும் இன்பந்தரும்
உடலை
நாம் இத்தனை
விலக்க வேண்டாம்" (ம.தொ.உ.கி., ப.20)
"உங்களைப் புதைக்க
உங்கள் பொம்மைகள்
உங்களைப் போல்
தயங்குவதேயில்லை" (ம.தொ.உ.கி., ப.32)

என்று உடலரசியலைப் பேசும் கவிதைகள் பெண் மைய எடுத்துரைப்பு உத்தியில் அமையக் காணலாம். எல்லா எடுத்துரைப்புகளிலும் கேட்பவர் என்ற நிலை தோற்றுவிக்கப்படுவதில்லை என்றாலும் குறிப்பிட்ட உணர்வுநிலையைக் காட்ட சசிகலா பாபு இதனைப் பயன்படுத்துகிறார்.

பெண்களின் எடுத்துரைப்பில் உரைப்பவர் கேட்பவர்களுக்கிடையில் காணப்படும் நெருக்கத்திற்கு மற்றுமொரு பரிமாணம் உண்டு. இவ்வெடுத்துரைப்பு உத்தி உரைப்பவரும் கேட்பவருமாகிய பெண்கள் சமூக அதிகார உறவில் ஒரே நிலையை, ஒரே கருத்தியலைப் பகிர்ந்து கொள்வதை மறைமுகமாகச் சுட்டுகிறது. அதுவே உணர்வு, உள, உடல் அனுபவங்களை உறுதி செய்து முன்னிலைபடுத்துகின்றது கவிஞர் சசிகலா பாபுவின் கவிதை வெளி, பெண் மைய எடுத்துரைப்பின் வழியாக பெண்நிலை நின்ற அனுபவங்களையும் உணர்வுகளையும் வாசகர்களிடம் எளிதாகக் கடத்திவிடுகின்றன.

தொகுப்புரை

பெண் என்பவள் ஆணை முன் வைத்த சமூகம், குடும்பம் என்ற அமைப்பிற்குள் தன்னைக் கரைத்துக் கொண்டு வாழ வேண்டுமென்ற நிர்பந்தத்தில் ஆணாதிக்க அரசியல் உள்ளது. களவு, கற்பு என்ற கருத்தாக்கங்களில் கற்பு, பெண்களை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் கட்டுப்படுத்துகிறது.

சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் தந்தை வழிச் சமூகப்போக்குகள் முதன்மை பெற்றிருந்தாலும் கூட தாய்வழிச் சமூகத்தின் எச்சங்கள் தென்படுகின்றன. இதனொரு பகுதியாக மரபிற்கு மாறாகக் காதல் உணர்வையும், உடல் வேட்கையையும் மனத்தடைகளற்று வெளிப்படையாகக் கவிதையில் யாத்திருப்பது இன்றைய பெண் கவிஞர்களுக்கு உந்துதல்களாக உள்ளது.

தற்காலப் பெண்ணியக் கவிஞர்களில் சுகிர்தாராணி, தமிழச்சி தங்கப்பாண்டியன் உள்ளிட்ட நவீன கவிஞர்கள் தங்கள் கவிதைகளில், பெண்களது பாலுணர்வு, காதலுணர்வு என்பவற்றைத் தனித்த மொழியில் பெண் உடல் சார்ந்த அனுபவங்கள் வழியாக முன்னிறுத்துகின்றனர்.

ஒரு பெண் கருத்தரித்தலிருந்து குழந்தை பெற்றெடுக்கும் வரை அடையும் உடல்சார் அனுபவங்கள், வலிகள், கொந்தளிப்புகள் எளிதில் கடந்து செல்லத்தக்க ஒன்றாக உள்ளன. இப்புறக்கணிப்பிற்குப் பின்னும் அரசியல் உள்ளது. அதுவே இவ்வுடல்சார் அனுபவத்தை வெளிக்காட்டாமல் பார்த்துக் கொள்கிறது. ஆனால் கவிஞர் சசிகலா பாபு அத்தடையைத் தாண்டுகிறார். தமது பாலியல்பு பற்றி வெளிக்காட்ட படிமங்களையும், குறியீடுகளையும் தேடி அலையாமல் நேரடியாக வெளிப்படுத்த அசாத்தியத் துணிச்சலும் புலமையும் வேண்டும் சசிகலா பாபு இதனை இயல்பாகப் பெற்றிருக்கிறார்.

சசிகலா பாபு-வின் கவிதைகள் பெண்ணுடல் குறித்து முன்வைத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்கின்றன. பெண்ணுடல் என்பது உறுப்பாக, கருவியாக, மொழியாக ஒரு ஆண் காண்பதிலிருந்து முற்றிலும் மாற்றாக ஒரு பெண் காணும் நோக்கில் சசிகலா பாபுவின் கவிதைகள் அமைந்திருக்கின்றன.

துணை நூல்கள்

1. சசிகலா பாபு, 2017, மறையத் தொடங்கும் உடல் கிண்ணம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
2. பிரேமா, இரா., 2001, பெண்ணியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

3. Irigarey Luce, 1985, This Sex which is not one, Trans, c, Porter with C, Burke Cornell University Press.
4. Sara Mills, 2003, Gender and Politeness, Cambridge.
5. Furman, Nelly. 1980, Women and Language in Literature and Society, Praeger.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.